ஏதோ பேசியதைப் போலவும் அங்கேயிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லாத ஒரு கருத்தை, திட்டவட்டமாக மறுத்துவிட்ட ஒரு கருத்தை, வேண்டுமென்றே, அவர்களுக்கும். இந்த அவைக்கும் இழுக்குத் தேடுகின்ற விதத்திலே தினமணி பத்திரிக்கை செய்தியாக வெளியிட்டு இருப்பது இந்த அவையின் உரிமை மீறிய செயலாகும் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. ''Shakdar and Kaul; May's Parliamentary practices'' என்ற அந்தப் புத்தகத்திலே ''வேண்டுமென்றே ஒரு உறுப்பினர் பேசியதைத் திரித்துக் கூறுவதும், பேசாததைப் பேசியதாகச் சொல்வதும் உரிமை மீறிய செயல்'' என்று தெளிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பித் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குறித்து அந்த நாளிதழின் ஆசிரியரிடமிருந்து விளக்கம் கேட்டு, பின்னர் என் தீர்ப்பை அளிக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

(அ) குன்றத்தூர், தேனி பகுதிகளில் மூளைக் காய்ச்சல் நோய் பரவியுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் எஸ். ஆர். இராதா, ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர், குமரி அனந்தன், எஸ். டி. உகம்சந்த், எஸ். எஸ். ராமசுப்பு, என். பழனிவேல், எஸ். ஏ. தங்கராஜன், மற்றும் ஜி. பொன்னுபிள்ளை ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்தில் குறிப்பாக செங்கை—அண்ணா மாவட்டம் குன்றத்தூர் மற்றும் மதுரை மாவட்டம் தேனி பகுதிகளில் மூளைக் காய்ச்சல் நோய் பரவி உள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

1990 ஏப்ரல் 3] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

அறிக்கை.

1990 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் செங்கை—அண்ணா மாவட்டம் குன்றத்தூர் நகர பஞ்சாயத்து எல்லையில் நான்கு நபர்களுக்கு சந்தேகப்பட்ட வைரஸ் மூளைக்காய்ச்சல் நோய் கண்டதாகத் தெரிகிறது. அவர்களில் மூன்று குழந்தைகள் இறந்துவிட்டனர். நோய் கண்ட நான்கு குழந்தைகளில், இரண்டு குழந்தைகள் எழும்பூர் அரசினர் குழந்தைகள் நல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, ஒரு குழந்தை சிகிச்சைக்குப் பின்னர் வீட்டுக்கு அனுப்பப்பட்டது. ஒரு குழந்தை சந்தேகிக்கப்பட்ட மூளைக் காயச்சல் நோயினால் இறந்துவிட்டது. குன்றத்தூர் நகரப் பகுதியில் இத்துறை (பொது சுகாதாரத் துறை)யின் வாயிலாக பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. 1–18 வயது வரையில் உள்ள குழந்தைகளின் இரத்தத் தடவல்கள் எடுக்கப்பட்டு, இத்துறையில் உள்ள மத்திய மலேரியா ஆய்வகத்தில் சோதனையிடப்பட்டது. சோதனையில் அவைகள் மலேரியா நோய்க் கிருமிகள் இல்லை எனக் கண்டுபிடிக்கப் பட்டது. மேலும் அங்கு 2631 விடுகள் மற்றும் 321 மாட்டுக் கொட்டகைகளில் நோய்த்தடுப்பு மருந்து தெளிப்புப் பணியும் மேற்கொள்ளப்பட்டது, அப்பகுதி தீவிர கண்காணிப்பின்கீழ் கொண்டுவரப்பட்டு 16–2–1990க்குப் பிறகு மேற்படி நோய் கண்டதாகத் தெரியவில்லை. இப்போது சுகாதாரத்துறை கூடுதல் இயக்குநர், முதுநிலை பூச்சியில் வல்லுநர் மற்றும் வேலூர் மண்டல பொது சுகாதாரத்துணை இயக்குநர் மற்றும் பூந்தமல்லி பொது சுகாதார நிலைய துணை இயக்குநர் ஆகியோர் பாதிக்கப் பட்ட அப்பகுதிக்கு விரைந்து சென்று சந்தேகிக்கப்படும் மூளைக் காய்சல் நோயைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற் கொள்ளும்படி தகுந்த நடவடிக்கைகள்/அறிவுரைகள் வழங்கி நோய் பரவாமல் கட்டுப்படுத்தப்பட்டது. 1990 பிப்ரவரி 3 ஆம் வாரத்திலிருந்து தீவிர கண்காணிப்பினால் அங்கு மேற்கொண்டு மூளைக்காய்ச்சல் நோய் கண்டதாகத் தகவல் இல்லை.

தேனியை அடுத்த கோட்டைபட்டி கிராமந்தில் 5–9 வயது வரையிலான மூன்று சிறுவர்கள் இறந்து விட்டதாகவும், அடைக்கப்பட்டி கிராமத்தில் ஐந்து வயது சிறுவனும், தேனி நகரத்தில் ஜவகர் நகரில் 4 வயது சிறுவனும் ஆக ஐந்து சிறுவர்கள் இறந்து விட்டனர். 12–3–1990 முதல் 21–3–1990 முடிய இடைப் பட்ட காலத்தில் இவ்விறப்பு நிகழ்ந்துள்ளதாகத் தெரிகிறது. அவற்றில் கோட்டைப்பட்டி மற்றும் அடைக்கப்பட்டி கிராமங் களில் 4 இறப்புகளில் 3 இறப்புகள் டி.பி. மெனின்ஜைடிஸ் எனவும், தேனி ஜவகர் நகர் பகுதியில் நிகழ்ந்துள்ள ஒரு இறப்பும் டி.பி. மெனின்ஜைடிஸ் எனவும் தெரிகிறது.

864 மக்கள் தொகை அடங்கிய கோட்டைபட்டி கிராமத்தில் மாடுகளும் பன்றிகளும் பெருமளவில் இருக்கின்றன. நெல்வயல்கள் தண்ணீரின்றி உலர்ந்திருப்பதினால் மூளைக் காய்ச்சல் நோய் பரப்பும் கொசுக்கள் உற்பத்தியாவதற்கு வாய்ப்பில்லை. மேலும்

அக்கிராமத்தில் மனிதர்களுக்கு இந்நோய் பரவும் முன்னரே ஆடுகளின் வாயிலும், காலிலும் நோய் தாக்கப்பட்டு பெரும்பாலான கால்நடைகள் இறந்துள்ளன. ஆகையால் கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநருக்கு இத்துறையிலிருந்து தகவல் தெரிவிக்கப்பட்டு விலங்கினத்திலிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய் பற்றி அப்பகுதிக்குச் சென்று ஆராயுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பொது சுகாதாரப் பணியாளர்கள் கீழ்க்கண்ட தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்:—

1. இரத்தத் தடவல்கள் சேகரித்தல் மற்றும் பரிசோதனை செய்தல்.
2. பூச்சிக் கொல்லி மருந்து பி.எச்.சி. 50 சதவீதத்தை வீடுகளிலும் மாட்டுத்தொழுவத்திலும் தெளித்தல்.
3. வீடு வீடாகச் சென்று தீவிர நடவடிக்கை எடுத்து புதிய நோயாளிகளிருப்பின் அவர்களைக் கண்டறிதல்.
4. பொதுத் துப்புரவுப் பணியினையும் மற்றும் சுகாதாரக் கல்வி நடவடிக்கையையும் மேம்படுத்தல்.

21-3-1990-க்குப் பிறகு இம்மாதிரியான நிகழ்வுகள் ஏதுமில்லை. இருப்பினும், நீடித்த வியாதி குறித்து விசாரணைகளும், நோய்த் தடுப்பு நடவடிக்கைகளும் நன்முறையில் நடைபெற்று வருகின்றன. அந்தப் பகுதியிலுள்ள மருத்துவ நிலையங்கள் நெருங்கிய கவனிப்பிற்காக அறிவுறுத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளன. கால்நடை பராமரிப்பு ஊழியர்களால், பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள ஆடுகள், மாடுகள் ஆகியவைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டு வருகிறது என்ற தகவல் தற்போது கிடைத்துள்ள நிலவரத்தின்படி தெரிய வருகிறது.

(10-05 மணி)

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற கருத்துக்கள் பல இருந்தாலும் தேனி பகுதியில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்த நோயின் காரணமாக 5 குழந்தைகள் இறந்திருக்கிறார்கள். இதைவிட அதிகமான அளவிற்கு ஆடுமாடுகள் இறந்திருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன, இந்த நோய் வருவதற்கான அறிகுறிகள் தென்படுவதற்கு முன்பே தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறதா என்பதையும் இப்படி நோய் ஏற்பட்டதற்குப் பின்னாலே அதைக் கண்டுபிடித்து உடனடியாக அதனை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி அதனை சாவிலிருந்து தடுப்பதற்கான நடவடிக்கைகள்

எடுப்பதற்கும் அரசு முன் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புவதோடு, இதனால் மதுரை மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலை மதுரை நகரத்திற்கும் பரவும் என்ற நிலை இருக்கிறது. பன்றி வளர்க்கப்படுகின்ற இடங்களில்தான் இது அதிகமாக இருப்பதாகவும், ஆடுகளின் வாயிலிருந்தும், கால்களிலிருந்தும் இந்த நோய் வருவதாக குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தால் இப்படிப்பட்ட பகுதிகள் மருத்துவ கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க.பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளில் 12–3–1990 முதல் 31–3–1990 வரையில் 5 இறப்புகள் நிகழ்ந்துள்ளதாக செய்திகள் வந்திருக்கின்றன. இந்தப் பகுதியில் இந்தச் செய்தி வந்ததற்கு முன்பாகவே இதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இந்த வியாதி மற்ற இடங்களிலே பரவாத அளவிற்கு பல்வேறு முன் நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகின்றது. குறிப்பாக ரத்த தடவல்கள்/ சேகரித்தல் மற்றும் பரிசோதனை செய்தல், பூச்சிக் கொல்லி மருந்து பி.எச்.சி. 50–ஐ வீடுகளிலும், மாட்டுத் தொழுவங்களிலும் தெளித்தல் போன்ற பணிகளை இந்தத் துறை செய்து வருகிறது. அது மட்டுமல்ல, இதிலே இறந்தவர்களுடைய நோய் என்ன என்பதை ஆராய்வதற்காக எடுத்துக்கொண்ட ஆராய்ச்சிகளில் இது டீ.பி.யின் மூலமாக வந்த மூளைக் காய்ச்சல் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. இதைத் தடுப்பதற்கான முன் முயற்சிகளையும், தடுப்பு நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. மேலும் கால்நடைத் துறையைச் சார்ந்த இயக்குநர் அவர்களுக்கும் இந்தச் செய்திகள் அறிவிக்கப்பட்டு, அவர்களும் அங்கே சென்று நேரடியாக நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். கால்நடைகளுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டு, தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு, மருந்துகள் கொடுக்கப்பட்டு, வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தேனிப் பகுதியில் இறந்தவர்கள் 10 வயதிற்கும் குறைந்த சிறுவர்களாக இருக்கிறார்கள். எந்த வியாதியாக இருந்தாலும் மூளை பாதிக்கப்படும்போது அதற்கு சரியான மருந்துகள் இருப்பதாகவே தெரியவில்லை. சீக்கிரமாகவே உயிர் போய் விடுகிறது. அதுவும் இந்த வியாதிக்கு மூல காரணமே, பன்றி வளர்ப்பு என்ற நிலையிலே ஓரளவிற்கு ஆராய்ச்சி மூலமாகத் தெரிகிறது. அப்பேற்பட்ட பன்றிகளை வளர்ப்பதிலிருந்து கட்டுப்படுத்தவேண்டும். இப்போது எங்கே பார்த்தாலும் பன்றிகள் திரிந்து கொண்டு இருப்பது சகஜமாகப் போய் விட்டது. அது இங்கேதான் திரிகிறது, அங்கேதான் திரிகிறது என்பது இல்லை. அதைக்கட்டுப்படுத்துவதற்கு வளர்ப்பவர்களிடம் இப்படித்தான் வளர்க்க வேண்டும், இப்படித்தான்

[திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1990 ஏப்ரல் 3

கொண்டுபோக வேண்டும், இப்படித்தான் வரவேண்டும் என்ற முறை வைத்து, அந்த வியாதி வராமல் இருபதற்கு என்ன பண்ணவேண்டுமோ அது மாதிரியான முறைகள் கடைபிடிக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான தடுப்பு நடவடிக் கைகளை அரசு எடுத்து வருகிறது. பொதுமக்களும் ஒத்துழைப் பார்கள் என்று சொன்னால், அதை நிச்சயமாக முழுமையாக நாம் செயற்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மூளைக்காய்ச்சல் கொண்ட குழந்தைகள் இறந்ததற்குப் பின்னாலேதான் அது மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக் கிறது என்று பலருக்குத் தெரிய வருகிறது. மூளைக் காய்ச்சல் ஒருவருக்குத் தோன்றிய உடனேயே என்னென்ன அறிகுறிகள் தென்படும் என்பதனை பரவலாக மக்கள் அறிகின்ற வகையிலே அரசு விளம்பரங்களின் மூலமாகவும், அறிக்கைகள் மூலமாகவும், 'ஸ்லைடு' களின் மூலமாகவும், விளம்பரப்படுத்துமா? காரணம் மூளைக் காய்ச்சல் வந்து, அதற்குப் பிறகு மீண்டவர்கள் என்பது மிக அரிதாக இருக்கிறது. மாண்டவர்களே அதிகமாக இருக்கிறது. மாட்டுத் தொழுவம் போன்ற இடங்களிலே எல்லாம்கூட நோய்த் தடுப்பு மருந்துகள் இவைகள் எல்லாம் பரவலாகத் தெளிக்கப் படுகிறது என்று சொல்கிறார்கள். அது வீரியம் குறைந்த மருந்தாக இருக்கின்ற காரணத்தால் செயல்படுவதில்லை என்று புகார் வந்துள்ளதா? அதைப்போலவே அந்தக் குழந்தைகளுக்கு என்னென்ன அறிகுறிகள் இருக்கும் என்ற வகையிலே மக்கள் அறிவதற்குரிய விளம்பரங்கள் மற்ற வகைகளிலே செயல்படுத்தப் படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

LEGISLATIVE TRUTH ALONE TRIUMPHS

(10-10 மணி)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று மூளைக்காய்ச்சலினால் பாதிக்கப்படுகிற பகுதிகளில் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. மேலும் அருகிலே இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு எடுத்துச் சென்று பிறகு அந்த நோய்க்கான அறிகுறிகளை அவர்களே, கண்டு பிடித்து உடனே பக்கத்திலே இருக்கிற அரசு மருத்துவமனைகளுக்கும் அவர்களே அனுப்பி வைக்கிறார்கள். இது போன்று மருந்துகள் சரியாக இல்லை என்ற குற்றச் சாட்டு இது வரையில் வரவில்லை. அப்படி வருமானால் அது பற்றியும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 3]

திரு. எஸ். டி. உகம்சந்த்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைய பாரதத்தினுடைய சிற்பிகளாக விளங்கக் கூடிய அந்தக் குழந்தைகள், அவர்கள் பிஞ்சுக் குழந்தைகளாக இருக்கிற சூழ்நிலையிலேயே இறக்கின்ற அளவுக்கு இந்த மூளைக் காய்ச்சல் வியாதியானது மிக அதிகமாக பரவிக் கொண்டு வருகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இதைப்பற்றி மக்கள் அறிவதற்காக, அதன் அறிகுறிகள் தோன்றிய உடனே என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை பிரச்சாரத்தின் மூலமாகவும் தெரியப்படுத்தவும், அதேபோல இந்த நோயானது பிப்ரவரி மாதம், மார்ச் மாதம், ஏப்ரல் மாதங்களில் தான் அதிகமாக வருகிறது. அந்த மாதங்களில் இருக்கிற குழந்தைகளுக்கு எல்லாம் மருத்துவக் குழுவினர் நேரிடையாகச் சென்று அவர்களுக்கு வேண்டிய வகையில் அதாவது அறிகுறிகள் தென்பட்ட உடனே நிவாரணம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை செய்ய அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூளைக் காய்ச்சலினால் 10 வயதிற்கு கீழுள்ள குழந்தைகள்தான் அதிகமாக பாதிக்கப்பட்டு இறந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தனியார் ஆஸ்பத்திரியிலும் அரசாங்க ஆஸ்பத்திரியிலும் சென்று பத்து நாட்கள் டிரீட்மென்ட் எடுக்கும் போதுகூட அதற்கு சரியான மருந்து இல்லை என்று அவர்கள் கைவிரித்து விட்டதனால் இந்த நிலைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் அதற்கு சரியான மருந்தை வெளிநாடுகளிலிருந்தாவது இறக்குமதி செய்து அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கண்டிப்பாக வைப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வியாதி பற்றிய கொடுமைகள் மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். எந்த அளவிற்கு இயலுமோ அந்த அளவிற்கு இதற்கு மருத்துவ மனைகளில் மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. அதை பரவலாக கொடுப்பதற்கான முயற்சிகளையும் உறுப்பினருடைய கருத்தின் படி அரசு மேற்கொள்ளும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் தேனி மற்றும் அதன் அருகில் உள்ள கோட்டைப்பட்டி, அடைக்கம்பட்டி போன்ற ஊர்களில் இந்த மூளைக்காய்ச்சல் வியாதியால் 5 சிறுவர்கள், பத்து வயதிற்குட்பட்ட சிறுவர்கள் இறந்திருக்கிறார்கள், அதுவும் அரசு

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கே தேவையான மருந்துகள் இல்லாத காரணத்தால் இறந்திருக்கிறார்கள். அதுவும் 12-3-90 முதல் 21-3-90 வரை அதாவது ஒரு வாரத்திற்குள்ளாக இந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது. இந்த ஒரு வார காலத்திற்குள் சம்பந்தப்பட்ட துறையினர் சரியான நடவடிக்கை எடுத்திருந்தால் அந்தக் குழந்தைகளைக் காப்பாற்றி இருக்கமுடியும். ஆகவே இம்மாதிரி நிகழ்ச்சி மேலும் தொடராமல் இருப்பதற்கு அரசு சீரியசாக நடவடிக்கை எடுத்து மற்றப் பகுதிகளிலாவது இந்நிகழ்ச்சி பரவாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு அரசு மருத்துவமனையில்....(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. என். பழனிவேல்; அரசு மருத்துவமனையில் சென்று அங்கு டாக்டர்களால் காப்பாற்ற முடியாமல் கைவிடப்பட்டு இறந்துவிட்ட அந்த குழந்தைகளின் குடும்பத்தார்களுக்கு அரசு நட்டஈடு ஏதேனும் கொடுப்பதற்கு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் மருந்து இல்லாததால் இந்த இறப்பு ஏற்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கற்பனையான ஒரு குற்றச்சாட்டை சாட்டுகிறார். அது கற்பனையே தவிர மருந்து இல்லாததால் ஏற்பட்ட சாவு என்று எந்தவிதமான குறிப்பும் இல்லை. எடுத்துச் செல்கிறபோதே காலதாமதமாக எடுத்துச் சென்றால், இது போன்ற இறப்புகளை தடுக்க முடியாத சூழ்நிலை எந்த மருத்துவ மனைக்கும் எந்த மருத்துவர்களுக்கும் ஏற்படக்கூடிய ஒன்றுதான். ஆகவேதான் இந்த இறப்புகள் ஏற்பட்டிருக்கிறதே தவிர மருத்துவ மனைகளிலே மருந்து இல்லாத குற்றத்தால் அல்ல. அப்படி சரியாக இருக்குமானால் உறுப்பினர் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டை ஒழுங்காக சொல்வார்களேயானால் அதற்கு வேண்டிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும். நிச்சயமாக இந்தச் செய்தியைப் பொறுத்த வரையில் 21-3-90க்கு பிறகு இது போன்ற இறப்பு நிகழ்ச்சிகள் எதுவும் ஏற்படவில்லை தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று குழந்தைகள் மூளைக்காய்ச்சலினால் இறப்பது என்பது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை சென்ற பிப்ரவரி மாதம் கூட திண்டுக்கல் நகரத்தில் முத்தலவுப்பட்டியில் 5 குழந்தைகள் மூளைக் காய்ச்சலினால் இறந்து விட்டார்கள், நான் கருதுகிறேன், நகரத்தில் ஏராளமான

பன்றிகள் கேட்பார் இல்லாமல் வளர்க்கப்படுகின்றன. அதைத் தடுப்பதற்கு அரசு ஆக்கப் பூர்வமான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அந்தக் குழந்தைகளின் மூளைக் காய்ச்சல் சம்பந்தமாக ஒரு ஆய்வு நடத்துவதற்கு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த அரசிடம் ஆக்கப் பூர்வமான திட்டம் ஏதேனும் உண்டா என அறிய விரும்புகிறேன்.

10-15 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து, ஆராய்ச்சிகள் எதுவும் நடத்துவதற்கான எந்த குறிப்புகளும் இல்லை. அதைத் தடுப்பதற்கான எல்லா முயற்சிகளையும் அரசு எடுக்கும் என்பதை மீண்டும் நான் வலியுறுத்திக் கூறிக் கொள் கிறேன்.

திரு. ஜி, பொன்னுபிள்ளை; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலே, 12—3—90 முதல் 21—3—90 வரை அந்த இடைக்காலத்தில் ஐந்து குழந்தைகள் இறந்து விட்டதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்கு அடுத் தாற்போல், கோட்டைப்பட்டியிலே, அதற்குப் பக்கத்திலே உள்ள அடைக்கப்பட்டி கிராமங்களிலே 4 இறப்புகளில் 3 இறப்புகள் டி. பி. எனவும் தேனி ஜவகர் நகர் பகுதியில் நிகழ்ந்துள்ள ஒரு இறப்பும் டி. பி. சம்பந்தப்பட்டது என்றும் குறிப்பிட்டிருக் கிறார்கள். அறிக்கையில் கண்ட 5 இறப்புக்களில் நான்கிற்குத் தான் கணக்கு சொல்லியிருக்கிறார்கள். மீதமுள்ள ஒரு இறப்பு எந்த வகையிலே நடைபெற்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி; பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவரம் இல்லை இது இந்த வகை மூளைக் காய்ச்சல் வியாதியிலே வரவில்லை.

(ஆ) மேட்டூர் மில் மூடப்பெற்றுள்ளதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

திரு. எம். சீரங்கன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூர் மில் கடந்த நான்கு ஆண்டுகளாக மூடிக் கிடப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS